






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 34 20.08.2025

ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய முத்துக்கள் உபதேசங்கள்



# அச்யுத சதகம்

## (ஸ்ரீ அச்சு அஸஅசும்)

## ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிய ஸ்தோத்ரம்

### *1.அனைவருக்கும் ஆபத்தில் கைகொடுப்பவன் எம்பெருமான்*

விஸ மம்மி கம்ம மக்கே
வபிரி கலந்தாண வீஹரிய கரணாணம்|
ணாஹ ணிஹி லாண அண்ணோ
ணத்தி துமாஹி ணய ஸச்ச வரத்தாயம்போ || (ப்ராக்ருதம் - 22)

विषमे कर्ममार्गे विपरिस्खलतां विह्वलित करणानाम् ।
नाथ निखिलानामन्यो नास्ति त्वन्नतसत्य हस्तालम्बः || 22

விஷமே கர்ம மார்கே
விபரி ஸ்கலதாம் விஹ்வலித கரணானாம்|
நாத நிகிலானாமன்யோ
நாஸ்தி த்வன்னத ஸத்ய ஹஸ்தாவலம்ப:// (ஸம்ஸ்க்ருதம் -22)

அடியவர்க்கு மெய்யனே! விசித்திரமான கர்மாவின் பயனாக தடுமாறி தளர்ந்து போன இந்திரியங்களையுடைய அனைவருக்கும் உன்னையன்றி வேறு கைகொடுப்பவர்கள் இல்லை.

சேதனர்கள் கர்மயோகத்தில் ஈடுபட்டு மிகவும் கஷ்ப்படுகிறார்கள். நடுவே தவறுகள், தடுமாறி விடுகிறார்கள். இளைத்து கஷ்டப்பட்டு ஓய்ந்து போகிறார்கள். பட்ட கஷ்டம் வீணாகிவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். அவ்வாறு அல்லல்படும் சேதனர்களுக்கு கைகொடுத்து நல்வழிகாட்டி காப்பவன் நீ மட்டுமே. வேறு யாராலும் காப்பாற்ற இயலாது. ஆக 'நாத' என்று அழைக்கிறார்.

'நாத்யதே' = எனக்கு நீ தான் நாதன். வேறு யாரை வேண்ட முடியும் என்று கருத்து. ப்ரபத்தியால் வசப்படுபவன் எம்பெருமான். ப்ரபன்னன் வேறு யாரை வேண்ட முடியும்.
*********************************************************
*********************************************************

## 2.அடியேனை ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றுவீராக

ஸம்ஸார ஸாய ராயோ
உக்கித்தம் தியஸ் ணாஹ புரியாளோயம்|
காஹே காஹிஹி ஹியஏ
கொத்துஹ மணி தப்பணம் வ லச்சிபுளஇயம் || (ப்ராக்ருதம் -87)

संसार सागराद् उत्क्षिप्तं त्रिदशनाथ स्फुरितालोकम्।
कदा करिष्यसि हृदये कौस्तुभमणि दर्पणमिव लक्ष्मी पुलकितम्॥ 87

ஸம்ஸார ஸாகராத்
உத்க்ஷிப்தம் த்ரிதசநாத ஸ்புரிதாலோகம்|
கதா கரிஷ்யஸி ஹ்ருதயே
கௌஸ்துபமணி தர்ப்பணமிவ லக்ஷ்மீத்ருஷ்டம் || (ஸம்ஸ்க்ருதம் -87)

தெய்வநாயகனே! ஸம்ஸாரக் கடலிலிருந்து வெளியேற்றப்பட்டு ஞான ஒளி பெற்றனான அடியேனை மஹாலஷ்மித் தாயாரால் பார்க்கப்பட்ட கொஸ்துப ரத்னமாதிய கண்ணாடியைப் போல் திருமார்பில் வைத்துக் கொள்ளும் காலம் தான் எப்போது வரும்.

தெய்வநாயகனே! பாற்கடலைக் கடையும் போது ஒளிமிக்க கொஸ்துப மண் தோன்றியது. அதை தேவரீர் திருமார்பில் அணிந்து கொண்டீர். அந்த ரத்தினம் மஹாலஷ்மித் தாயார் திருமுகம் பார்த்துக் கொள்ளும் கண்ணாடியாக விளங்குகிறது. ஜீவாத்மாவிற்கு கௌஸ்துப மணி ரத்தினமே தேவதையாக விளங்குகிறது. இந்த ஜீவாத்மாவை தெய்வநாயகனே ஸம்ஸார சாகரத்திலிருந்து வெளிக் கொண்டு வர வேண்டும் . அப்போது தான் கர்ம ஸம்பந்தத்தினால் மங்கி இருந்த ஞானம் தெளிவடைந்து சிறக்கும். பிறகு கொஸ்துப ரத்தினத்தைப் போல அடியேனையும் திருமார்பில் தரித்தார் அங்கு உறையும் மஹாலக்ஷ்மித் தாயார் என் மீது கருணை காட்டுவார். இந்த நிலையை அடியேன் எப்போது அடைவேன்?





# உபநிஷத்துக்களில் - ஹரி

(1) தைத்திரீய நாராயணவல்லி.

பூமி விஷ்ணுவினால் அளக்கப்பட்டது. வராஹத்தால் தூக்கி யெடுக்கப்பட்டது. நாராயணனே பரப்ரஹ்மம்; நாரா யணனே பரதத்துவம்; நாராயணனே பரஞ்சோதி; நாராயணனே பரமாத்மா. உலகில் காண்பனவும் கேட்பனவுமான எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்கு கிறான். நாராயணன். பல வேதவாக்கியங்களில் ஆயிரம் தலை யுடையவன், தேவன், எங்கும் கண்ணுடையவன். அனைவர்க் கும் நன்மையளிப்பவன், எல்லாமாயிருப்பவன், அழியாதவன், மேலான பிரபு, மற்ற பொருள்களைக் காட்டிலும் மேலான வன், எப்போதுமிருப்பவன், ஹரி (அனைத்தையும் ஸம்ஹரிப் பவன்) அனைத்துக்கும் தலைவன், தனக்குத்தானே தலைவன். எப்போதும் பரிசுத்தமாயிருப்பவன், அடியவரை நழுவவிடாத அச்யுதனாயிருப்பவன், அறியும். பொருள்களில் சிறந்தவன், உலகனைத்துக்கும் ஆத்மாவாயிருப்பவன், மேலான ப்ராப்ய யமாயிருப்பவன். (மூவகை அளவற்றி) அளந்தனாயிருப்பவன், அழிவில்லா தவன் என்று நாராயணனே கூறப்படுகிறான்

(2) நாராயணோபனிஷத் - நாராயணனிடமிருந்து பிரமன் பிறந்தான்: நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டானான்.

(3) மஹோபநிஷத்: ஆதியில் நாராயணனால் படைக்கப்பட்ட அண்டத்தில் சதுர்முகனான பிரமன் பிறந்தான். அவனுடைய முகத்திலிருந்து சூலமேந்திய புருஷனான முக்கண்ணன் தோன்றினான்.

(4) ஸுபாலோ பனிஷத்- பிரமனின் கோபத்தினால், அவனுடைய முகத்தினின்றும் உருத்திரன் உண்டானான். நாராயணன் ஒருவனே உலகைப் படைத் தளித்து அழிப்பவனாகவும், உயிர்களுக்குத் தாய் தந்தை முத் லான எல்லா உறவுமாகவும், ப்ராப்ய ப்ராபகமாகவு மிருக் கிறான். பாபமற்றவனாய், எல்லா பூதங்களுக்கும் அந்தராத் மாவாய்ப் பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன் நாராயணன் ஒருவனே,

(5) முண்டகோபனிஷக்- பிரமனே தேவர்களில் முணடகோபனிஷத் - பிரமனே தேவர்களில் முதலில் பிறந்தவனாவான்.

(6) ப்ருஹதாரண்யகம்- பரம் பொருளிடமிருந்து பிறந்த இந்திரன், வருணன், ஸோமன், உருத்திரன் முதலானோர் தேவர்களில் க்ஷத்ரிய ஜாதியை சேர்ந்தவர்கள்.

(7) கடோபனிஷத் - மோக்ஷ மடைபவன் விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறான். புருஷனுக்கு மேற் பட்டது ஒன்றுமில்லை. அவனே மேலான ப்ராப்யப்ராபக மாவான்.

(8) ப்ரச்நோபனிஷத்—உலகனைத்தையும் உடலாகக் கொண்டவன் ஹரி.




